# காஸா மக்களுக்கு இஸ்ரேல் திடீர் கெடு

**ஜெருசலேம், அக். 13:** காஸாவின் வடக்குப் பகுதியில் உள்ள 10 லட்சம் பாலஸ்தீனர்கள் 24 மணி நேரத்தில் தெற்குப் பகுதிக்குச் செல்ல வேண்டும் என இஸ்ரேல் ராணுவம் வெள்ளிக்கிழமை கெடு விதித்தது.

ஏற்கெனவே ஹமாஸ் ஆயுதக் குழுவினரை முற்றிலுமாக ஒழிக்கும் வகையில் காஸா மீது தரைவழித் தாக்குதலுக்கு இஸ்ரேல் தயாராகி வரும் நிலையில், இந்த அறிவிப்பு தரைவழித் தாக்குதல் தொடங்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளது.

ஆனால், குறுகிய நேரத்தில் 10 லட்சம் பேர் இடம்பெயர்வது பேரழிவை ஏற்படுத்தும்; இந்த அறிவிப்பை இஸ்ரேல் திரும்பப் பெற வேண்டும் என ஐ.நா. எச்சரிக்கை விடுத்துள்ளது.

**ராணுவம் கெடு:** காஸா மீது தரைவழித் தாக்குதலுக்கு தயாராகி வருவதாக இஸ்ரேல் ராணுவம் வியாழக்கிழமை தெரிவித்திருந்தது.

இந்நிலையில், காஸாவின் வடக்குப் பகுதியில் உள்ள 10 லட்சம் பாலஸ்தீனர்கள் வெளியேறி தெற்குப் பகுதிக்குச் செல்ல வேண்டும் என இஸ்ரேல் ராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகரி வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

மற்றொரு செய்தித் தொடர்பாளர் ஜொனாதன் கான்ரிகஸ் கூறுகையில், பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ராணுவம் நடவடிக்கை எடுக்கும். போர் நிறைவடைந்ததும் மக்கள் தங்கள் பகுதிக்குத் திரும்புவதற்கு அனுமதிக்கப்படுவர் என்றார்.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லாய்டு ஆஸ்டினுடன் இணைந்து செய்தியாளர்களைச் சந்தித்த இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யாயோவ் காலண்ட் கூறுகையில், பொதுமக்களை மனித் கேடயமாகப் பயன்படுத்தி தீவிரவாதிகள் செயல்பட்டு வருகின்றனர். அவர்களை மக்களிடமிருந்து பிரிக்க வேண்டிய அவசியம் உள்ளது. எனவே, தங்கள் உயிரைக் காக்க விரும்புவோர் தெற்குப் பகுதிக்குச் செல்ல வேண்டும் என்றார்.

**ஐ.நா. எச்சரிக்கை:** இஸ்ரேலின் இந்த நடவடிக்கையால் பேரழிவு ஏற்படும் என ஐ.நா. எச்சரிக்கை விடுத்துள்ளது. ஐ.நா. செய்தித் தொடர்பாளர் ஸ்டெபானே துஜாரிக் கூறுகையில், இப்போதைய சூழ்நிலையில் மக்களை வெளியேற்றுவது சாத்தியமில்லாதது. ஏற்கெனவே பெரும் துயரத்தில் இருக்கும் மக்களை பேரழிவுச் சூழலுக்கு கொண்டுசெல்வதாகும். எனவே, இஸ்ரேல் தனது அறிவிப்பை திரும்பப் பெற வேண்டும் என்றார்.

'பாலஸ்தீனர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த இஸ்ரேல் முயற்சி செய்கிறது. இஸ்ரேலின் உளவியல் ரீதியிலான இந்தப் போர் தந்திரத்தைப் புறந்தள்ளி பாலஸ்தீனர்கள் தங்கள் வீடுகளிலேயே இருக்க வேண்டும்' என ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

**அச்சத்தில் பொதுமக்கள்:** இஸ்ரேலின் தாக்குதலில் பல ஆயிரக் கணக்கானோர் ஏற்கனவே வீடுகளை இழந்துள்ள நிலையில், ராணுவத்தின் இந்தத் திடீர் வெளியேற்ற உத்தரவு காஸா நகரம் உள்ளிட்ட பகுதிகளில் பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

40 கி.மீ. நீளம் கொண்ட குறுகிய நிலப்பரப்பான காஸாவில் 23 லட்சம் பேர் வசித்து வருகின்றனர். இஸ்ரேல் ராணுவத்தின் உத்தரவின்படி பொதுமக்கள் அனைவரும் வெளியேறினால் காஸாவின் ஒட்டுமொத்த மக்களும் தெற்குப் பகுதியில் குவிய நேரிடும்.

## 10 லட்சம் பேர் தெற்குப் பகுதிக்கு வெளியேற உத்தரவு





இஸ்ரேல் ராணுவத்தின் அறிவிப்பைத் தொடர்ந்து காஸாவிலிருந்து உடைமைகளுடன் வெளியேறிய மக்கள்.

## காஸாவுக்குள் நுழைந்த இஸ்ரேல் தரைப் படை!

**ஜெருசலேம், அக். 13:** காஸா முனைப் பகுதிக்குள் முதல்முறையாக இஸ்ரேல் தரைப் படை வெள்ளிக்கிழமை நுழைந்து சிறிய அளவிலான ராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டது.

இது தொடர்பாக நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் உரையாற்றிய பிரதமர் நெதன்யாகு, 'இது ஆரம்பம்தான். ஹமாஸை முற்றிலும் அழிப்போம். இந்தப் போரை இதுவரை இல்லாத அளவு வலிமையாக முடிப்போம்' என்றார்.

இதற்கிடையே, லெபனான் எல்லையில் இஸ்ரேல் நடத்திய பீரங்கி குண்டு தாக்குதலில், சர்வதேச பத்திரிகையாளர்கள் குழுமியிருந்த பகுதிக்குள் குண்டு விழுந்து ஒரு பத்திரிகையாளர் உயிரிழந்தார். 5 பேர் காயமடைந்தனர்.

## 'ஆபரேஷன் அஜய்': முதல் கட்டமாக 212 இந்தியர்கள் தாயகம் திரும்பினர்



இஸ்ரேலிலிருந்து மீட்கப்பட்டு சென்னை விமான நிலையத்துக்கு வெள்ளிக்கிழமை வந்தடைந்த தமிழர்கள் 14 பேரை வரவேற்ற அமைச்சர் மா.சுப்பிரமணியன், கலாநிதி வீராசாமி எம்.பி., அயலகத் தமிழர் நலத் துறை ஆணையர் ஜெசிந்தா லாசரஸ்.

**புது தில்லி, அக். 13:** இஸ்ரேலிலிருந்து இந்தியர்களை மீட்கும் 'ஆபரேஷன் அஜய்' திட்டத்தின்கீழ் முதல்கட்டமாக 212 இந்தியர்கள் வெள்ளிக்கிழமை தாயகம் திரும்பினர்.

இஸ்ரேலில் சுமார் 18,000-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் வசித்து வருகின்றனர். அவர்களை மீட்க 'ஆபரேஷன் அஜய்' திட்டம் தொடங்கப்பட்டிருப்பதாக மத்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் புதன்கிழமை அறிவித்தார்.

அதன்படி, இஸ்ரேல்வாழ் இந்தியர்கள் நாடு திரும்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட முதல் விமானம், இஸ்ரேலின் பென் குரியோன் சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டது. இந்தச் சிறப்பு விமானத்தில் 212 இந்தியர்கள் தில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்துக்கு வெள்ளிக்கிழமை காலை வந்தடைந்தனர். மத்திய அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் பயணிகளை நேரில் வரவேற்றார்.

பயணிகள் தங்களின் அனுபவம் குறித்து கூறுகையில், 'வான்வழித் தாக்குதலுக்கான எச்சரிக்கை ஒலியுடன்தான் தினமும் விழித்தோம். அந்த எச்சரிக்கை ஒலியும், போர் அனுபவமும் எங்கள் மனதைவிட்டு அவ்வளவு எளிதில் விலகாது.

இஸ்ரேல் அரசால் நிறுவப்பட்டுள்ள பாதுகாப்பான தங்குமிடங்களில் பதுங்கியிருந்து எங்களைப் பாதுகாத்துக் கொண்டோம். இந்தியாவுக்குத் திரும்பியதில் மகிழ்ச்சியடைகிறோம். இஸ்ரேலில் மீண்டும் அமைதி திரும்பி பணிக்குத் திரும்ப விரும்புகிறோம். எங்களை மீட்டு அழைத்து வர உரிய நடவடிக்கை எடுத்த இந்திய அரசுக்கும், பிரதமர் மோடிக்கும், இஸ்ரேலிலுள்ள இந்திய தூதரகத்துக்கும் நன்றி' எனத் தெரிவித்தனர்.

**21 தமிழர்கள்:** இஸ்ரேலிலிருந்து மீட்கப்பட்டவர்களில் 21 தமிழர்களும் அடங்குவர். அவர்களில் சென்னை விமான நிலையம் வந்த 14 பேரை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வரவேற்றார். 7 பேர் கோவை விமானநிலையம் வந்தடைந்தனர்.

# அர்ப்பணிப்புடன் செயல்பட்டால் தனித்துவம் நிச்சயம்

## எழுத்தாளர் சிவசங்கரி

நமது நிருபர்

**புது தில்லி, அக்.13:** நாம் மேற்கொள்ளும் எந்தச் செயலையும் அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்தால் அதற்கு தனித்துவம் கிடைக்கும் என்று 'சரஸ்வதி சம்மான்' இலக்கிய விருது பெற்ற எழுத்தாளர் சிவசங்கரி கூறினார்.

இந்தியாவில் வழங்கப்படும் மிக உயரிய விருதுகளில் ஒன்றாகக் கருதப்படும், 'சரஸ்வதி சம்மான்' இலக்கிய விருது பிரபல எழுத்தாளர் சிவசங்கரிக்கு தில்லியில் வியாழக்கிழமை (அக்.12) வழங்கப்பட்டது.

இந்த விருதை கே.கே.பிர்லா அறக்கட்டளை வழங்கியுள்ளது. இதையடுத்து, அவருக்கு தில்லித் தமிழ்ச் சங்கத்தில் தினமணியின் பங்களிப்புடன் இணைந்து வெள்ளிக்கிழமை (அக்.13) மாலை பாராட்டு விழா நடைபெற்றது.

இந்த விழாவுக்கு தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன் தலைமை வகித்துப் பேசுகையில், 'பெண்ணியம் எழுப்புகின்ற பல்வேறு கேள்விகளை, அவர்களது சோதனைகளை, சாதனைகளை, தனது கதாபாத்திரங்களாக வடிவமைத்து வெளிக் கொணர்ந்த பெருமைக்குரிய எழுத்தாளர் சிவசங்கரி.

இன்றைக்கு இந்தியாவில் உள்ள அனைத்து எழுத்தாளர்களையும், எழுத்துகளையும் இணைக்கின்ற ஒரு பாலமாக அவரின் 'இலக்கியம் மூலம் இந்திய பிணைப்பு' எனும் தொகுப்பு உள்ளது. அது இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப்பட வேண்டிய, பாராட்டப்பட வேண்டிய சாதனையாகும்.

ஆனால், அவருக்கு தமிழக அரசின் கலைமாமணி விருது இன்னும்கூட தரப்படவில்லை; தில்லியில் அவருக்கு சரஸ்வதி சம்மான் விருது வழங்கப்பட்டிருப்பதை தமிழக அரசின் கவனத்துக்குக் கொண்டுசெல்ல விரும்புகிறேன்.

தலைசிறந்த எழுத்தாளர்களை, படைப்பாளிகளை மற்றவர்கள் பாராட்டுவதற்கு முன்பு தமிழகம் முந்திக் கொள்ளவேண்டும் என்பது எனது வேண்டுகோள்' என்றார் கி.வைத்தியநாதன்.

**இந்த நிகழ்ச்சியில் எழுத்தாளர் மாலன் நிகழ்த்திய பாராட்டுரை:** இலக்கியத்துக்கு எத்தனையோ விருதுகள் தரப்படுகின்றன. அவற்றில் பிரபலமானது சாகித்திய அகாதெமி விருது.

இந்த சரஸ்வதி சம்மான் விருது அதை விடப் பல மடங்கு உயர்ந்தது. காரணம், சாகித்திய அகாதெமி விருது 22 இந்திய மொழிகளுக்கும் தரப்படுகிறது. ஆனால், சரஸ்வதி சம்மான் விருதானது இந்தியாவில் உள்ள ஒரு மொழி - நூலுக்குத் தரப்படுகிறது.

11 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழுக்கு இந்த விருது கிடைத்திருக்கிறது. சமகால வாழ்வியலைப் பற்றிய நூலுக்கு விருது கிடைப்பது இதுதான் முதல்முறை.

சிவசங்கரி எழுத்தாளர் மட்டுமன்றி பாடகர், நாட்டியக் கலைஞர், கீர்த்தனை இயற்றுபவர்; மொழிபெயர்ப்பு ஆற்றல் மிக்கவர். பல புகழ்பெற்ற எழுத்தாளர்கள் உள்ளனர்; தாங்கள் பெற்ற புகழை சமூக மேம்பாட்டுக்காக பயன்படுத்த வேண்டும் என்று எண்ணிச் செயல்பட்டவர்கள் மிகக் குறைவு; அவர்களில் ஒருவராக மிளிர்பவர் சிவசங்கரி என்று மாலன் புகழாரம் சூட்டினார்.

**எழுத்தாளர் சிவசங்கரி நிகழ்த்திய ஏற்புரை:** இந்த விழாவை தில்லித் தமிழ்ச் சங்கமும், தினமணி நாளிதழும் இணைந்து ஏற்பாடு செய்திருப்பதும், அதில் பங்கேற்றதும் மிகவும் மகிழ்ச்சி மிக்க தருணமாகும்.

எனது எழுத்துப் பணியில் 'இலக்கியம் மூலம் இந்தியப் பிணைப்பு' எனும் தொகுதிக்காக பல்வேறு மாநிலங்களின் சிறந்த எழுத்து ஆளுமைகளைச் சந்திக்க நேரிட்டது; அந்தந்த மாநில மக்களின் மொழி, கலாசாரம், பெண்களின் நிலை என அனைத்தையும் அறிந்துகொள்ள முடிந்தது.

**தவமாக நினைக்கிறேன்:** மொத்தம் 18 மொழிகளில் உருவான அந்தப் படைப்புக்காக செலவிட்ட 16 ஆண்டுகளைத் தவமாக நினைக்கிறேன்.

எனது எழுத்துப் பணியை பணத்துக்காக அல்லாமல், இலக்கியத்துக்காகவும், நாட்டுக்காகவும் செய்கிறேன்.

சரஸ்வதி சம்மான் விருது கிடைத்த பிறகு மத்திய அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்தபோது, 'இந்தியாவை இணைப்பது மதம் இல்லை; கலாசாரம், பண்பாடு தான்' என்றேன். நாம் செய்யும் எந்தவொரு செயலையும் அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்தால் அதில் தனித்துவம் கிடைக்கும் என்றார் சிவசங்கரி.

இந்த நிகழ்ச்சியில் தில்லி தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் இரா. முகுந்தன் தனது வரவேற்புரையில், 'அடுத்த தலைமுறைக்கு நல்ல இலக்கியத்தின் தாக்கத்தை ஏற்படுத்த ஒரு பயிற்சிப் பட்டறையை சிவசங்கரி ஆரம்பிக்க வேண்டும்' என்றார்.

சங்கத்தின் தலைவர் சக்தி பெருமாள், துணைத் தலைவர் பெ.ராகவன் நாயுடு உள்ளிட்டோர் எழுத்தாளர் சிவசங்கரியை கௌரவித்தனர். சங்கத்தின் இணைச் செயலாளர் உமா சத்தியமூர்த்தி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். சங்கத்தின் பொருளாளர் எஸ். அருணாசலம் நன்றியுரையாற்றினார்.

தில்லி முத்தமிழ்ப் பேரவையின் பொருளாளர் ஆ.வெங்கடேசன், தில்லிக் கம்பன் கழகத்தின் தலைவர் கே.வி.கே. பெருமாள், சண்முகானந்த சங்கீத சபாவின் செயலாளர் கிருஷ்ணசாமி மற்றும் தில்லிவாழ் தமிழர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.



சரஸ்வதி சம்மான் விருது பெற்ற எழுத்தாளர் சிவசங்கரிக்கு தில்லி தமிழ்ச் சங்கத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாராட்டு விழாவில் பங்கேற்று அவரைக் கௌரவித்த தினமணி ஆசிரியர் கி. வைத்தியநாதன். உடன், எழுத்தாளர் மாலன், தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சக்தி பெருமாள், துணைத் தலைவர் ராகவன் நாயுடு, பொதுச் செயலாளர் இரா.முகுந்தன் உள்ளிட்டோர்.

# கலாம், காலம் தந்த கொடை!


ஹாரி ஷெல்டன்

நாடு முழுவதிலுமிருந்து புனிதப்பயணிகளை ஈர்க்கும் ராமேஸ்வரம் தீவில் 92 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்த ஆவுல் பக்கீர் ஜெயினுலாப்தீன் அப்துல் கலாம், ஏன் இன்னும் அனைவராலும் நினைவு கூரப்படுகிறார்? குடியரசுத் தலைவர் மாளிகையை அவர் எவ்வாறு அனைவருக்குமானதாக மாற்றி அமைத்தார்? இந்தியாவின் குடியரசுத் தலைவர்களிலேயே மிகச் சிறந்தவராக அவர் ஏன் போற்றப்படுகிறார்?



**டாக்டர் கலாம், குடியரசுத் தலைவர் மாளிகையின் கதவுகளை குழந்தைகளுக்குத் திறந்துவிட்டார். அவர் குழந்தைகளையும் அவர்களின் கருத்துரிமையையும் மதித்தார். தனக்கு வரும் ஒவ்வொரு மின்னஞ்சலுக்கும் அவரே தனிப்பட்ட முறையில் பதில் அளிப்பார்.**

டாக்டர் அப்துல் கலாமின் தனிச்செயலராக 24 ஆண்டுகள் இருந்தவன் என்ற முறையில், அவர் தன்னை அனைவருக்குமான குடியரசுத் தலைவராக நிலைநிறுத்திக் கொண்டதையே மாபெரும் சாதனையாகக் கருதுகிறேன்.

நாளை (அக். 15)
டாக்டர் அப்துல் கலாம் பிறந்தநாள்.

கட்டுரையாளர்:
டாக்டர் அப்துல் கலாமின் தனிச்செயலர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# நெகிழிக்கு மாற்றாகும் காகிதம்

**பேரா. தி. ஜெயராஜசேகர்**

உலகெங்கும் பயன்பாட்டிற்குப் பிந்தைய நெகிழிகள் ஒரு தீராத பிரச்னையாக உருவெடுத்துள்ளது. இவ்வகை நெகிழிகள் நிலவாழ், கடல்வாழ் உயிரினங்களின் உயிரிழப்புகளுக்கு காரணமாகின்றன.

உலக மக்கள் ஒவ்வொருவரும் சராசரியாக ஆண்டொன்றுக்கு 30 கிலோகிராம் நெகிழி பொருட்களை பயன்படுத்துகின்றனர். இந்தியர்கள் ஆண்டொன்றுக்கு சராசரியாக 13.6 கிலோகிராம் நெகிழிப் பொருட்களை உபயோகப்படுத்துகின்றனர். இந்த நுகர்வு குறைவெனினும் உலகிலேயே தவறான நெகிழி பயன்பாடு நம்மிடம்தான் அதிகம் என வல்லுநர்கள் கூறுகின்றனர்.

2022-ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் 19 வகையான ஒற்றை பயன்பாட்டு நெகிழிகளுக்கு இந்தியா முழுவதும் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடை காரணமாக வீடுகளில் இருந்து வெளியேற்றப்படும் நெகிழிக் குப்பைகள் வீதிகளில் நிறைந்திருக்கின்றன.

தடை செய்யப்பட்ட நெகிழிப் பொருட்களை நாம் கண்டறிவது எளிதான காரியம் அல்ல. அதே போல் பயன்பாட்டில் உள்ள சில நெகிழி பொருட்களுக்கான மாற்றுப் பொருளின் நிலைத்தன்மை குறித்த ஐயம் மக்களிடத்தில் இருக்கிறது.

மக்கும் தன்மை காரணமாக, நெகிழிக்கு எதிரான போராட்டத்தில் காகிதம் சிறந்த மாற்றுப் பொருளாக உருவெடுத்துள்ளது. கணினிவழி வணிகம் (இகாமர்ஸ்), பெரிய சில்லறை விற்பனையாளர்கள், உள்ளூர் கடைக்காரர்கள், மருந்துக் கடைக்காரர்கள் என அனைவரும் தங்களின் விற்பனைப் பொருட்களை வைக்க காகிதப் பைகளை கொள்முதல் செய்கின்றனர்.

காகிதத்தொழிலுக்காககாடுகள் அழிக்கப்படுவதை தனது கண்டு பிடிப்பு தடுத்து நிறுத்தும் என்று நினைத்து தான் ஸ்டென் குஸ்டாவ் துலின் நெகிழிப் பைகளை தயாரித்தார் என்பது இவர்களுக்குத் தெரியாது.

மர வர்த்தகத்தில் கிட்டத்தட்ட 40 %-ஐ காகிதம், காகிதக் கூழ் தொழிலுக்கு உலக தொழில்துறை பயன்படுத்துகிறது என்று இயற்கைக்கான உலகளாவிய நிதியத்தின் அறிக்கை கூறுகிறது. சட்டவிரோதமாக மரத்தை இறக்குமதி செய்யும் மூன்றாவது பெரிய நாடு இந்தியா என்ற நிலையில் சட்டவிரோதமாக வெட்டப்படும் மரங்களின் எண்ணிக்கை குறித்த தரவுகள் இந்த அறிக்கையில் இல்லை.

வெட்டப்படும் மரங்களை விட அதிக எண்ணிக்கையிலான மரங்கள் நடப்படுவதால் காகிதங்களுக்காக மரம் வெட்டப்படுவதை ஒரு நேர்மறை செயலாகவே இந்திய காகிதத் தொழில் துறை கருதுகிறது.

மரங்கள் முதிர்வடையும்போதுதான் அதிக கரிமத்தை (கார்பனை) தன்னகத்தே வைத்துக் கொள்கின்றன என்று ஆய்வுகள் கூறுகின்றன. எனவே நடப்படும் புதிய மரங்கள் அதிக கரிமம் கொண்டு முதிர்வடைய நூற்றுக்கணக்கான ஆண்டுகள் தேவைப்படும்.

மரம் வெட்டுதல், மறு நடுதல் பணியில் ஏற்படும் பல்லுயிர் இழப்பு குறித்த கணக்கு நம்மிடம் இல்லை. இந்தியாவில் அருகிவரும் உயிரினமான தங்கநிற மந்தி குரங்குகள் போன்ற இனங்களின் வாழ்விடத்தை சட்டவிரோதமாக மரம் வெட்டும் குழு அழித்து வருகிறது.

2018-ஆம் ஆண்டில், இந்திய மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சில பொதி கட்டும் (பேக்கேஜிங்) பொருட்களின் வாழ்க்கை சுழற்சியை பகுப்பாய்வு செய்தது.

நெகிழிப் பையுடன் ஒப்பிடும்போது காகிதப்பை புவியினை 2 முதல் 3 மடங்கு வெப்பமடைய செய்யும் என இந்த பகுப்பாய்வு கண்டறிந்தது. ஓசோனைக் அருகச் செய்யும் திறன் கொண்ட நிற நீக்கி (ப்ளீச்சிங்) போன்ற பல்வேறு ரசாயனங்கள் சேர்த்து காகிதம் தயாரிக்க அதிக நீரும் ஆற்றலும் தேவைப்படுகின்றன.

எண்மப்படுத்தல் (டிஜிட்டலைஸ்) காரணமாக அச்சுத்துறை சரிவினை சந்தித்தாலும் நெகிழி பொருட்களுக்கு மாற்றாக பைகள், உறிகுழாய்கள் (ஸ்ட்ராக்கள்), கோப்பைகள், கொள்கலன்கள் போன்றவற்றின் தேவை இருப்பதால் இந்தியாவில் காகிதத் தொழில் உலகில் வேறு எங்கும் இல்லாத வகையில் வளர்ந்து வருகிறது.

காகிதம் கொண்டு உருவாக்கப்படும் பொருட்கள் வலிமையாக இருக்க தடிமனாகவும், ஈரப்பதத்தைத் தடுக்க நெகிழி, அலுமினியம் அல்லது ரசாயன கரைப்பான்கள் கொண்டு பூசப்பட்டும் உருவாக்கப்படுகின்றன.

நெகிழிப் பொருட்கள் மீதான தடை அமலுக்கு வந்த பிறகு கரும்புச்சக்கை, அரிசி உமி போன்ற விவசாயக் கழிவுகளில் இருந்து தயாரிக்கப்படும் சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒற்றைப் பயன்பாட்டு மாற்று உற்பத்தி அதிக வளர்ச்சியைக் காணவில்லை. விற்பனையாளர்கள் தாங்கள் விற்கும் பானங்களுக்கான நெகிழி உறிகுழாய்களை காகித வடிவில் மாற்றும் எளிய வழியைக் கண்டறிந்தனர்.

ஆனால் உறிகுழாய்களின் தேவையை நீக்குவதற்கு குளிர்பான கொள்கலனின் (பேக்கேஜ்) வடிவமைப்பில் புதுமைகளைக் கொண்டு வரலாம் அல்லது ஒற்றை உபயோகத்திற்கு பதில் மிகவும் நிலையான மறுபயன்பாட்டுக் கொள்கலனை அறிமுகப்படுத்தலாம்.

குழம்பு சார்ந்த பொருட்களை பொதிவதற்குக் கூட பல உணவகங்கள் காகிதப் பொதிகளுக்கு மாறியுள்ளன. நெகிழி மனித ஆரோக்கியத்தை மோசமாக பாதிக்கும் என அறியப்பட்டது போலவே, காகிதப் பொதிகளில் உள்ள மெழுகுப் பூச்சிலிருந்து வெளியாகி உணவில் ஊடுருவும் ஹைட்ரோகார்பனும் ஆபத்தானது என்று ஆய்வுகள் காட்டுகின்றன.

உணவு பொதிய உபயோகப்படுத்தப்படும் காகிதத்தில் நீர், எண்ணெய் போன்றவற்றை உறிஞ்சுவதைத் தடுப்பதற்காக பயன்படுத்தப்படும் பூச்சுப் பொருட்கள் நச்சுத்தன்மையுடையவை. அவை மனிதர்களின் நாளமில்லா சுரப்பிகளின் செயலிழப்பிற்கு வழி வகுக்கும். இங்ஙனம் பயன்படுத்தப்பட்ட காகிதக் கழிவுகளை மறுசுழற்சி செய்வது என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய நெகிழிப் பொருட்கள் சுற்றுச்சூழலில் ஏற்படுத்தும் தாக்கத்தாலும், அவற்றின் குறைந்த மறுசுழற்சி காரணமாகவும் நெகிழிக்கு தடை கொண்டு வரப்பட்டது. சுற்றுச்சூழல் தாக்கம், மறுசுழற்சி ஆகிய இந்த இரண்டு அளவுருக்களிலும் ஒற்றைப் பயன்பாட்டு காகித தயாரிப்புகள் மோசமாகவே செயல்படுகின்றன.

தற்போதைய காகித பொதி உண்மையில் புதிய நெகிழிப் பொதியாகிவிட்டது என்பதே கசப்பான உண்மையாகும்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சாதனையும் சவாலும்!

நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டில் ஜிஎஸ்டி வருவாய் ரூ.9.92 லட்சம் கோடியைக் கடந்திருக்கிறது என்பது நம்பிக்கையை ஏற்படுத்தும் செய்தி. கடந்த நிதியாண்டின் அரையாண்டைவிட 11.1% வரி வருவாய் அதிகரித்திருக்கிறது. இந்த ஆறு மாதங்களில் நான்கு மாதங்களின் ஜிஎஸ்டி வருவாய் ரூ. 1.6 லட்சம் கோடியைத் தாண்டியது என்பதும், சராசரி மாத வருவாய் ரூ.1,65,418 கோடி என்பதும் மகிழ்ச்சி அளிக்கும் செய்திகள்.

செப்டம்பர் மாதத்தில், ஆகஸ்ட் மாதத்தின் பற்று - வரவுக்கான ஜிஎஸ்டி வசூலிக்கப்படுகிறது. 2017-19-இல் ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தியது முதல், அடைக்கப்படாமல் நிலுவையில் இருந்த தொகையைச் செலுத்துவதற்கு செப்டம்பர் 30 வரை தவணைக்கான கெடு நீட்டிக்கப்பட்டிருந்தது. ஆகஸ்ட் 1 முதல் ரூ.5 கோடிக்கு மேல் பற்று - வரவு இருந்தால், 'இ-இன்வாய்சிங்' என்கிற இணைய ரசீது வழங்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம்கூட, செப்டம்பர் மாதத்தில் ஜிஎஸ்டி வருவாய் அதிகரித்ததற்கான காரணிகளாக இருக்கக்கூடும்.

பொருளாதாரத்தின் வளர்ச்சி அறிகுறியாக மோட்டார் வாகன விற்பனை பார்க்கப்படுகிறது. அந்த வகையில் பார்த்தால், செப்டம்பர் மாதத்தில் மட்டும் மோட்டார் வாகன விற்பனை கடந்த ஆண்டு செப்டம்பருடன் ஒப்பிடும்போது 2.5% அதிகம். செப்டம்பரில் மட்டும் 3.6 லட்சம் மகிழுந்துகள் விற்பனையாகி இருக்கின்றன என்கிறது அந்தத் துறைசார்ந்த புள்ளிவிவரம்.

செமி கண்டக்டர்கள் கட்டுப்பாடு அகன்றதும், புதியதாகப் பல 'மாடல்கள்' அறிமுகப்படுத்தப்பட்டதும், மகிழுந்துகளின் உற்பத்தி அதிகரித்ததற்கும், விற்பனை கூடியதற்கும் காரணங்களாக இருக்கக்கூடும். மோட்டார் வாகனங்கள் மட்டுமல்லாமல், அன்றாட ஆடம்பர உபயோகப் பொருள்களின் விற்பனையும் அதிகரித்திருப்பது, மக்கள் மத்தியில் பணப்புழக்கம் அதிகரித்திருப்பதன் அடையாளமாகக் கருதப்படுகிறது.

இதற்கிடையில், அக்டோபர் 10-ஆம் தேதி வெளியாகி இருக்கும் சர்வதேச நிதியத்தின் 'உலகப் பொருளாதாரக் கணிப்பு' அறிக்கை உற்சாகமூட்டுவதாக அமைந்திருக்கிறது. நடப்பு 2023-24-இல் மட்டுமல்லாமல், அடுத்த 2024-25 நிதியாண்டிலும் இந்தியாவின் வளர்ச்சி 6.3% அளவில் இருக்கும் என்று அந்த அறிக்கை தெரிவித்திருக்கிறது.

'குதித்தெழுந்து ஓடுவதற்கு பதிலாக, தட்டுத் தடுமாறி நகர்கிறது உலக பொருளாதாரம்' என்று குறிப்பிடும் உலக பொருளாதார கணிப்பு அறிக்கை, இந்தியாவின் வளர்ச்சியை, ஆறுதல் அளிக்கும் செய்தி என்று தெரிவிக்கிறது. உலகின் வளர்ச்சி அடைந்த பொருளாதாரங்கள் எல்லாமே அதிகரித்த விலைவாசி உயர்வை எதிர்கொண்டு, உள்நாட்டுப் பொருளாதாரத் தேக்கத்தை எதிர்கொள்ளும் வேளையில், இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சியடைவதை அந்த அறிக்கை பாராட்டுகிறது.

இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 6.3% என்றால், சீனாவின் வளர்ச்சி 5% என்றும், அடுத்த நிதியாண்டில் அது 4.2% ஆகக் குறையும் என்றும் அந்த கணிப்பு தெரிவிக்கிறது. இந்தியாவையும் சீனாவையும் ஒப்பிடுவதில் ஒரு முரண் இல்லாமல் இல்லை. சீனாவில் 17.7 டிரில்லியன் டாலர் (சுமார் ரூ.1,474 லட்சம் கோடி) ஜிடிபி என்பது, இந்தியாவின் ஜிடிபியைவிட ஐந்து மடங்கு அதிகம் என்கிற நிலையில் இந்த ஒப்பீடு சரியாக இருக்காது. பார்க்லே அறிக்கையின்படி, இந்தியா தொடர்ந்து சில ஆண்டுகள் 8% வளர்ச்சியைக் காட்டினால்தான் சீனா அடைந்திருக்கும் அளவிலான முன்னேற்றத்தை எட்ட முடியும்.

மந்தகதியில் காணப்படும் உலகப் பொருளாதாரத்துடன் ஒப்பிடும்போது, இந்தியாவின் 6.3% வேகமான வளரும் பொருளாதாரமாகத் தெரிகிறது. இதனால் மட்டுமே அனைவருக்கான வருமானத்தையோ, வாழ்க்கைத் தரத்தையோ உயர்த்திவிட முடியாது. வேலைவாய்ப்பை அதிகப்படுத்தும் அளவிலான வளர்ச்சியை நாம் காணவில்லை என்கின்றன புள்ளிவிவரங்கள்.

இந்திய அரசின் வேலைவாய்ப்புத் தொடர்பான புள்ளிவிவரங்கள் நம்பிக்கை அளிப்பவையாக இல்லை. கொள்ளை நோய்த்தொற்றுக்கு முந்தைய 2018-19-க்கும், தற்போதைய 2022-23-க்கும் இடையே, பலர் உற்பத்தித் துறையிலிருந்து மீண்டும் கிராமங்களுக்குத் திரும்பி இருக்கிறார்கள். வேலைவாய்ப்பில் விவசாயத்தின் பங்களிப்பு 2018-19- உடன் ஒப்பிடும்போது 3% அதிகரித்து 45.8%-ஆகக் காணப்படுகிறது. இதிலிருந்து, தொழில்துறை போதிய வளர்ச்சி அடையவில்லை என்று தெரிகிறது.

உலகளாவிய பொருளாதாரம் மந்தகதியில் இயங்குவதால், ஏற்றுமதிக்கான வரவேற்பு மிகவும் குறைந்து காணப்படுகிறது. அதனால் உற்பத்தித் துறையில் வளர்ச்சி தேக்க நிலைமை அடைந்திருக்கிறது. அதன் தொடர் விளைவாக வேலைவாய்ப்பும் குறைந்துவிட்டதால், பலர் மீண்டும் விவசாயத்துக்கே திரும்புகிறார்கள் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள்.

விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் முயற்சியில், உணவுப் பொருள்களின் விலைவாசி ஏற்றத்தைத் தவிர்க்க முடியாது. அது நடுத்தர வருவாய்ப் பிரிவினர், அடித்தட்டு மக்களை பாதிக்கும் என்பதையும் மறந்துவிடலாகாது.

போதாக்குறைக்கு மத்திய ஆசியாவில் ஏற்பட்டிருக்கும் பதற்றமான சூழலால், கச்சா எண்ணெயின் விலை அதிகரித்தால் இந்திய பொருளாதாரம் கடுமையான பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும். கட்டுக்கடங்காத விலைவாசி உயர்வு ஏற்பட்டால், வேகமான நமது வளர்ச்சி தடைபடுவது மட்டுமல்ல, தேக்க நிலையையும் எட்டக்கூடும். அதனால் 8% வளர்ச்சி என்பது இப்போதைக்கு சாத்தியம் இல்லை போலிருக்கிறது.

# கிரிப்டோ சொத்துகள்: வழிகாட்டுதல்களை விரைந்து செயல்படுத்த ஜி20 நிதியமைச்சர்கள் அழைப்பு

**மரகெஷ் (மொராக்கோ), அக். 13:** கிரிப்டோ சொத்துகள் தொடர்பான சிக்கல்களைச் சமாளிக்க ஜி20 அமைப்பின் வழிகாட்டுதல்களை ஒருங்கிணைந்து மற்றும் விரைவாக செயல்படுத்துமாறு ஜி20 நிதியமைச்சர்கள் கூட்டத்தில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மொராக்கோவில் ஜி20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் 4-ஆவது சந்திப்பு நடைபெற்றது.

இதில் இந்தியா சார்பில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் பங்கேற்றனர்.

இந்தச் சந்திப்பில் கிரிப்டோ சொத்துகள் மீதான ஜி20 வழிகாட்டுதல்களை சர்வதேச நிதியம் மற்றும் நிதி நிலைத்தன்மை அமைப்பு இணைந்து தயாரித்த ஒருதொகுப்பு அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதையடுத்து வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தொகுப்பு அறிக்கையில் முன்மொழியப்பட்ட கிரிப்டோ சொத்துகள் தொடர்பான ஜி20 வழிகாட்டுதல்களை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஜி20 அமைப்பில் அங்கம் வகிக்காத நாடுகளிலும் இந்தக் கொள்கை கட்டமைப்புகளை செயல்படுத்துதல், உலகளாவிய ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு மற்றும் தகவல் பகிர்வு மற்றும் தரவு இடைவெளிகளை பூர்த்தி செய்தல் உள்பட முக்கிய வழிகாட்டுதல்களை ஒருங்கிணைந்து மற்றும் விரைவாக செயல்படுத்துவதற்கு நாங்கள் அழைப்பு விடுக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மொராக்கோவின் மரகெஷ் நகரில் நடைபெற்று வரும் ஜி20 நிதியமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்.

**இந்தியா-ஸ்விட்சர்லாந்து இடையே 5-ஆவது நிதிப் பேச்சுவார்த்தை அமைச்சர்கள் ஒப்புதல்-** அடுத்த ஆண்டு இந்தியா-ஸ்விட்சர்லாந்து இடையில் நிதிப் பேச்சுவார்த்தை நடத்த நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் ஸ்விட்சர்லாந்து நிதி அமைச்சர் கரீன் கெல்லர் சுட்டர் ஒப்புக் கொண்டனர்.

மொராக்கோவின் மரகெஷ் நகரில் 4-ஆவது ஜி20 நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் கூட்டம் மற்றும் சர்வதேச நிதியம்-உலக வங்கியின் ஆண்டு கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

அதில் பங்கேற்ற மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஸ்விட்சர்லாந்து நிதி அமைச்சர் கரீன் கெல்லர் சுட்டரை சந்தித்து இரு நாட்டுப் பொருளாதார உறவுகள் குறித்துப் பேசினார்.

அப்போது அடுத்த ஆண்டு இரு நாடுகளுக்கு இடையேயான 5-ஆவது நிதிப் பேச்சுவார்த்தையை நடத்த ஒப்புக் கொண்டனர். இது தொடர்பாக நிதி அமைச்சகம் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட பதிவு:

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள இரு நாடுகளுக்கு இடையேயான நிதிப் பேச்சுவார்த்தையில் நிதிப் பொருளாதாரம், டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை, கட்டமைப்பு துறைகளில் ஒன்றிணைந்து செயல்பட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்திய-ஐரோப்பிய தடையற்ற வர்த்தக அமைப்பு, வர்த்தக மற்றும் பொருளாதார கூட்டு ஒப்பந்தம், இரு தரப்பு முதலீட்டு ஒப்பந்தம் உள்ளிட்ட பரஸ்பர வர்த்தக ஒப்பந்தங்களும் விரைவில் இறுதி செய்யப்படும் என அமைச்சர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

காப்பீட்டுத் துறையில் இந்தியாவுடன் ஸ்விட்சர்லாந்து இணைந்து செயல்பட விரும்புவதாக அமைச்சர் கரீன் கெல்லர் தெரிவித்தார் எனப் பதிவிட்டுள்ளது.